ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1804/3 - 2013 අප්‍රේල් මස 01 වැනි සඳුදා - 2013.04.01
*1804/3 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*வடமேல் மாகாண மாகாண சபையின் 20.... ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க நீர்ப்பாசன நியதிச்சட்டம்*

*இங்கு கீழ்க் குறிப்பிடப்படுகின்ற வடமேல் மாகாண மாகாண சபையின் 20.... ஆம் ஆண்டின் ..........ஆம் இலக்க, நீர்ப்பாசன நியதிச்சட்டம் இன்றைய திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் பின்னர் வடமேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன். எவரேனும் ஆள் ஒருவருக்கு இந்த நியதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் விடயங்கள் எதனையும் முன்வைக்க வேண்டுமாயின் அவற்றை குறித்த திகதிக்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.*

*டி. பீ. ஹேரத்,*
*கமத்தொழில், சிறு நீர்ப்பாசன, கமநல அபிவிருத்தி, விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சர்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*கமத்தொழில், சிறு நீர்ப்பாசன, கமநல அபிவிருத்தி, விலங்கு உற்பத்தி மற்றும்*
*அபிவிருத்தி அமைச்சு (வடமேல் மாகாணம்),*
*தம்புள்ள வீதி,*
*குருநாகல்.*

**வடமேல் மாகாண நீர்ப்பாசன நியதிச்சட்டம்**

*வடமேல் மாகாணத்திற்குள் அமைந்துள்ளதும் மாகாணம் ஒன்றைவிடக் கூடுதலான மாகாணங்களினூடாக பாய்ந்து செல்லும் ஆறுகள் சம்பந்தமான நீர்ப்பாசனத் திட்டங்கள் அல்லது மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன, காணி அபிவிருத்தி பிரேரிப்புகள் தவிர நீர்ப்பாசன திட்டங்களை வகுப்பதற்கும், திட்டமிடுவதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும், பராமரிப்பதற்கும், புனரமைப்பு செய்வதற்கும், இவற்றுடன் தொடர்புபட்ட இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2004 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சிறு நீர்ப்பாசன, கிராமியப் பாதை நியதிச்சட்டத்தை நீக்குவதற்குமானதொரு நியதிச்சட்டம்.*

*இந்த நியதிச் சட்டம் 1951 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம், 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம், 1973 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம், 1983 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம், 1990 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம், 1994 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நீர்ப்பாசன (திருத்தச்) சட்டம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்துக்கும் 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கும் ஏற்புடைத்தாகாது.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

சுருக்கப் பெயர்.

1. இந்த நியதிச் சட்டம் வடமேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க, நீர்ப்பாசன நியதிச்சட்டம் என அழைக்கப்படும்.

நடைமுறைக்குவரும் திகதி.

2. வடமேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வடமேல் மாகாண ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெறும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நியதிச் சட்டத்தின் நோக்கங்கள்.

3. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறாகும்.

(1) இரண்டு மாகாணங்களைவிடக் கூடுதலான மாகாணங்களின் ஊடாக பாய்ந்து செல்லும் ஆறுகள் சம்பந்தமான நீர்ப்பாசன திட்டங்கள் அல்லது மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன, காணி அபிவிருத்தி பிரேரிப்புகள் தவிர நீர்ப்பாசனங்கள், குளமுறைமைகள், நீர்த்தேக்கங்கள், அணைகள், கால்வாய்கள், நீரூற்றுக்கள், நீர்ப்பாசன ஒதுக்கங்கள், நீர்த்தாரை, நீரேந்துப் பிரதேசங்கள் என்பன தொடர்பில் திட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்தல், நீர்ப்பாசனங்களின் எல்லையை நிர்ணயித்தல், தொழிற்படுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

(2) வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தை நிறுவுதல்.

(3) வடமேல் மாகாண நீர்ப்பாசன குழுவைத் தாபித்தல்.

(4) இயற்கை கமத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட கமத்தொழில் கலாசாரமொன்றை உருவாக்குதல்.

(5) வடமேல் மாகாணத்தில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள சிறு நீர்ப்பாசன, கிராமியப் பாதைப் பராமரிப்பு நிதிய நியதிச்சட்டத்தின் முகாமைத்துவத்தை முறைப்படுத்தல்.

(6) நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்தி குழுக்களையும் நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ அபிவிருத்தி குழுக்களையும் தாபித்தல்.

(7) நீர்ப்பாசன முறைமையின் நிலைபேறுடைய அபிவிருத்திக்குரிய பணிகளை தயாரித்தல்.

பாகம் 1

### மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டமைப்பும் பணிகளும்

திணைக்கள மொன்றைத் தாபித்தல்.

4. இந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வடமேல் “வடமேல் மாகாண நீர்ப்பாசன திணைக்களம்” என்னும் பெயரில் திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

திணைக்கள மானது சட்ட பூர்வமான நிறு வனமொன்றென.

5. இந்தத் திணைக்களமானது இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் உடைய தனது பெயர் கொண்டு நீர்ப்பாசன விடயத்திற்குரிய சகல பணிகளையும் புரிவதற்கும் வழக்கு தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் பிற சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிக்கவும் அதிகாரமுள்ள சட்டபூர்வமான நிறுவனமொன்றாகும்.

திணைக்களத்தின் கட்டமைப்பு.

6. இந்தத் திணைக்களமானது மாகாண பணிப்பாளர் ஒருவரையும் பிரதிப் பணிப்பாளர் ஒருவரையும் உதவிப் பணிப்பாளர் ஒருவரையும் பிற உத்தியோகத்தர்களையும் பணிப்பாளர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

பணிப்பாளரின் நியமிப்பு.

7. வடமேல் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்துக்கு கையளிக்கப்படுகின்ற தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ''வடமேல் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்'' என்னும் இலங்கை பொறியியலாளர் சேவையின் 1 ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் சிபாரிசின் மீது மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

அரசாங்க உத்தி யோகத்தர்களையும் நியமிக்கலாமென.

8. சிறந்த முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்களை வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களாக நியமித்துக் கொள்ளப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் இதற்காக வரிசை அமைச்சின் செயலாளரினது உடன்பாட்டைப் பெற்று நியமித்துக் கொள்வதற்கும் அதிகாரமுள்ளது.

9. இந்த நியதிச்சட்டததின் நோக்கங்களுக்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் தண்டனைச் சட்டக்கோவையில் பொருள் கோரப்பட்டுள்ளவாறு அரசாங்க பணியாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும். *அரசாங்க உத்தியோகத்தர்களென.*

10. வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிகள் பின்வருமாறாகும். *திணைக்களத்தின் பணிகள்.*

(1) ஏற்கனவேயுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை மிக பயனுள்ள வகையில் திட்டமிடுதல்.

(2) நீர்ப்பாசன முறைமைகளை புனரமைத்தல், அபிவிருத்தி செய்தல், பாதுகாத்தல், நீர்ப்பாசனங்களின் எல்லைகளை நிர்ணயித்தல், பாதுகாத்தல் போன்றவற்றுக்கான திட்டங்களை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

(3) புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை மிகப் பயனுள்ள வகையில் திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்தலும்.

(4) நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு, மேம்படுத்துகை, பாதுகாப்பு, பராமரிப்பு போன்றவற்றுக்காக நீர்ப்பாசனக் குழுக்களின் பங்களிப்பினை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(5) நீர்ப்பாசன திட்டங்களுக்கு சேதம் விளைவிக்கும் ஆட்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுத்தல்.

(6) நீர்ப்பாசன ஒதுக்கங்களைப் பிரகடனப்படுத்தல்.

(7) பயிர்ச்செய்கை பிரதேசங்களையும் அளவுகளையும் நிர்ணயித்தல்.

(8) மாகாண கமத்தொழில் அமைச்சு, மாகாண கமத்தொழில் திணைக்களம், விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் உட்பட ஏனைய கமத்தொழில் துறைசார்ந்த அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு கமத்தொழில் நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிறுவன ரீதியிலான உதவிகளை வழங்குதல்.

(9) நீர் முகாமைத்துவம் மற்றும் கூட்டு நீர் தாவர முகாமைத்துவம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(10) நீர்ப்பாசன திட்டங்கள் சேதமடைவதற்கும் அழிந்து போவதற்குமான சுற்றாடல் தாக்கங்களை தடுத்தல், சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல், சுற்றாடல் முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(11) நீர்ப்பாசன திட்டங்களின் கீழும், நீர்ப்பாசன திட்டங்களுக்கு உட்படாததுமான வயற்காணிகளை பயிர் செய்கை பண்ணுவதற்கான பயிர்ச்செய்கை கால திட்டங்களை வகுப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.

(12) திணைக்களத்தின் விடய நோக்கெல்லைக்குரிய தகவல் முறைமையை இற்றைப்படுத்தி பேணுதல்.

(13) நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களுக்கான வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள், நடவடிக்கை முறைகளைத் தயாரித்தல்.

(14) நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுவினதும் நீர்ப்பாசன முறைமைகளின் முகாமைத்துவ அபிவிருத்தி குழுவினதும் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பிலான எல்லைகளை விதித்துரைத்தலும் மேற்பார்வை செய்தலும்.

(15) ஏதேனும் நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்தி குழுவொன்றின் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர், நிதி அல்லது சொத்துக்கள் எவரேனும் உறுப்பினர் ஒருவரினால் அல்லது சங்கத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் முறையற்ற விதத்தில் கையாளப்பட்டிருத்தல் அல்லது முறைகேடுகள் நிகழ்ந்திருந்தால் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்தல்.

(16) நீர்ப்பாசன திட்டங்களின் மேலதிக நீரை பயன்படுத்துவதற்கு திட்டங்களைத் தயாரித்தல்.

(17) கமத்தொழில் சார் வீதி அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுத்தல்.

(18) நீர்ப்பாசன புனரமைப்பின் பொருட்டு நீர்ப்பாசன முகாமைத்துவ குழுக்களுக்கு மண் அல்லது சேறு வாருவதற்கு அங்கீகாரம் வழங்குதல்.

*மாகாண பணிப் பாளருக்குரிய அதிகாரம்.*

*11.* செயலாளரின் பொதுவான நிர்வாகத்துக்கு உட்பட்டு இந்த நியதிச் சட்டத்திற்காக அல்லது இதற்கு இடைநேர்விளைவான விடயங்களுக்காக ஆக்கப்படும் கட்டளைகளை அல்லது ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பணிப்பாளருக்கு கையளிக்கப்படும்.

*பணிப்பாளரின் அதகிரரங்களை கையளித்தல்.*

*12.* பணிப்பாளர் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு தனது அதிகாரங்களை திணைக்களத்தின் பிற உத்தியோகத்தர்களுக்கு கையளித்து நடைமுறைப்படுத்தலாம்.

*வலய அல்லது மாவட்ட அலுவல கங்களைத் தாபித்தல்.*

*13.* நீர்ப்பாசன முகாமைத்துவ நடவடிக்கைகளில் பயனுள்ள முகாமைத்துவத்துக்காக வலய அல்லது மாவட்ட அலுவலகங்களை தாபித்து நடாத்தி செல்லலாம்.

பாகம் II

**மாகாண நீர்ப்பாசனக் குழு**

*மாகாண நீர்ப்பாசனக் குழு.*

*14.* மாகாண நீர்ப்பாசனக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதை இலகுபடுத்துவதன் பொருட்டு வடமேல் மாகாண நீர்ப்பாசனக் குழு என்னும் பெயரில் மாகாண நீர்ப்பாசனக் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் மாகாண நீர்ப்பாசன விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் இந்தக் குழுவின் தலைவராவதோடு, மாகாண நீர்ப்பாசன விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் குழுவின் செயலாளராதல் வேண்டும். இந்தக்குழு மாகாண விலங்கு உற்பத்தி, அபிவிருத்திக் குழுவுடனும் மாகாண கமத்தொழில் குழுவுடனும் ஒருங்கிணைந்து செயற்படுதல் வேண்டும்.

*குழுவின் கட்டமைப்பு.*

*15.* (1) இந்தக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

i. மாகாண நீர்ப்பாசன விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள்;

ii. குருநாகல், புத்தளம் மாவட்ட செயலாளர்கள் ;

iii. வடமேல் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் ;

iv. வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி விலங்கு சுகாதார பணிப்பாளர் ;

v. வடமேல் மாகாண கமத்தொழில் பணிப்பாளர் ;

vi. வடமேல் மாகாண காணி ஆணையாளர் ;

vii. வடமேல் மாகாண பொறியியல் பணிப்பாளர் ;

viii. குருநாகல், புத்தளம் பிரதி பொலிஸ் மா அதிபர்கள் ;

ix. வடமேல் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் (மத்திய அரசாங்கம்) ;

x. குருநாகல், புத்தளம் கமநல அபிவிருத்தி பிரதி அல்லது உதவி ஆணையாளர்கள் ;

xi. பணிப்பாளர், வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை ;

xii. குருநாகல், புத்தளம் தேசிய நீர்வள மூலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட தலைவர்கள்;

xiii. குருநாகல், புத்தளம் கமத்தொழில், கமநல காப்புறுதிச் சபையின் மாவட்ட முகாமையாளர்கள் ;

xiv. குருநாகல், புத்தளம் மாவட்ட காடு பேணல் உத்தியோகத்தர்கள் ;

xv. வடமேல் மாகாண வனவுயிர் உதவி பணிப்பாளர் ;

xvi. மாகாண முகாமையாளர் - நெல் சந்தைப்படுத்தல் சபை ;

xvii. குருநாகல், புத்தளம் தேசிய உரச் செயலகத்தின் மாவட்டத் தலைவர்கள் ;

xviii. நீர்ப்பாசன துறைசார்ந்த விசேட நிபுணத்துவ அறிவுடைய இருவர்;

xix. நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் இருவர்; அத்துடன்

xx. மாகாணத்தினுள் கமத்தொழில் விலங்கு உற்பத்தி மற்றும் நீர்ப்பாசன நோக்கங்களுக்கு உரியதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அரச, அரச சார்பற்ற அல்லது தனியார் துறையின் விசேட கருத்திட்டங்களின் தலைவர்கள் இருவர் ;

(2) அமைச்சர் சந்தர்ப்பத்துக்கேற்ப அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அல்லது அமைப்புக்களின் பிரதிநிதிகளை நீர்ப்பாசனக் குழுவுக்கு அழைக்கலாம்.

16. இந்த நியதிச்சட்டத்தின் 15(1) ஆம் உப பிரிவின் i முதல் xvii வரையுள்ள உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுவதோடு, xviii முதல் xx வரையுள்ள உறுப்பினர்கள் அமைச்சரினால் அவருடைய தற்றுணிபின் பேரில் நியமிக்கப்படலாம். குழு உறுப்பினர்களை நியமித்தல்.

17. அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு (02) வருடங்களாகும். உறுப்பினர்களின் பதவிக்காலம்.

18. அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைதல், பதவியை இராஜினாமா செய்தல், அமைச்சரின் தற்துணிபின் பேரில் பதவியிலிருந்து விலக்குதல், தொடர்ச்சியாக மூன்று (03) தடவைகள் கலந்து கொள்ளாமல் இருத்தல் அல்லது உறுப்பினர் ஒருவரின் மரணம் அல்லது மனநலம் குன்றியமை காரணமாக உறுப்புரிமை இல்லாதொழிவதோடு, இந்த வெற்றிடங்கள் அமைச்சரினால் நிரப்பப்படுதல் வேண்டும். உறுப்புரிமையை இல்லாதொழித்தல்.

19. மாகாண குழுவானது ஆகக்குறைந்தது இரண்டு (02) மாதங்களுக்கு ஒரு தடவை கூடுதல் வேண்டும். தேவையாயின் தலைவரின் ஆலோசனையின் மீது செயலாளரினால் மேலதிக கூட்டங்களைக் கூட்டலாம். குழுக் கூட்டம்.

20. (1) குழுவின் கூட்டநடப்பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் 1/4 பங்காதல் வேண்டும். கூட்ட நடப்பெண்.

(2) உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பது குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு அல்லது கூட்டங்களில் தீர்மானம் எடுப்பதற்கு தடையாக அமையமாட்டாது.

21. மாகாண நீர்ப்பாசனக் குழுவின் பணிகள் பின்வருமாறாகும். குழுவின் அதிகாரங்களும் பணிகளும்.

(1) தேசிய கொள்கைக்கு அமைவாக மாகாண நீர்ப்பாசனங்களுக்குரியதாக இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக மாகாணத்திற்குரிய கொள்கைகளை வகுப்பதற்கு சிபாரிசுகள் மற்றும் பிரேரிப்புகளை சமர்ப்பித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

(2) இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை தொழிற்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் உரிய ஆலோசனைகளை வழங்குதல்.

(3) மாகாண நீர்ப்பாசன திட்டங்களை அங்கீகரித்தல்.

(4) மாகாண நீர்ப்பாசன திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வளங்கள் மற்றும் உதவிகளை வழங்கி அது தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை எடுத்தலும் மதிப்பிடுதலும்.

(5) மாகாணத்திற்குள் நீர்ப்பாசன திட்டங்கள் வகுக்கும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் உருவாகும் பிரச்சினைகளுக்கு தேவைப்படும் தீர்மானங்களை வழங்குதல்.

(6) மாகாணத்தினுள் ஏதேனும் நிறுவனமொன்றினால், அமைப்பொன்றினால், ஆதாரநிலையமொன்றினால், கருத்திட்டமொன்றினால், நிகழ்ச்சித் திட்டமொன்றினால் அல்லது இத்தகைய ஒருங்கிணைவான நிறுவனமொன்றினால், ஆள் ஒருவரினால், ஆட்கள் குழுவொன்றினால் நீர்ப்பாசனங்களுக்குரிய அத்தகைய ஏதேனும் கருத்திட்டமொன்றை அல்லது நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்குதல்.

(7) நீர்ப்பாசன வயற் காணிகளை கம விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு ஆகக்கூடிய மட்டத்தில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

22.(1) குழு அதன் கூட்டங்களுக்கான பணிகளை நடத்திச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை முறைகளை ஆக்கிக் கொள்ளலாம். நடவடிக்கை முறைகளும் கலந்து கொள்வதற்கான படிகளும்.

(2) மாகாண குழுக்கூட்டங்களில் கலந்து கொள்பவர்களுக்கு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் படியொன்று வழங்கப்படலாம்.

## பாகம் III
## மாகாண நீர்ப்பாசன நிலைபேறுடைய பராமரிப்பு நிதியம்

*மாகாண நீர்ப் பாசன நிலைபேறு டைய பராமரிப்பு நிதியம்.*

23. இதனகத்துப்பின்னர் நிதியம் என அழைக்கப்படும் வடமேல் மாகாண நீர்ப்பாசன நிலைப்பேறுடைய பராமரிப்பு நிதியம் என்னும் நிதியமொன்று தாபிக்கப்படும்.

*நிதியம் கூட்டிணைந்த நிறுவனமொன்றென.*

24. நிதியமானது இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையுமுடைய குறித்தொதுக்கப்பட்ட பெயர் கொண்டு வழக்குத் தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்குத்தொடரவும் பிற சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிக்கவும் அதிகாரமுள்ள கூட்டிணைந்த நிறுவனமொன்றாகும்.

*சொத்துக்கள் பொறுப்புக்கள் கையளிக்கப்படு மென.*

25. 2004 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, சிறு நீர்ப்பாசன, கிராமிய பாதைப் பராமரிப்பு நிதிய நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சிறு நீர்ப்பாசன, கிராமிய பாதைப் பராமரிப்பு நிதியத்தின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் இந்த நியதிச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் நிதியத்துக்கு கையளிக்கப்படும்.

*நிதியத்தின் கட்டுக் காப்பு.*

26. நிதியத்தின் பொறுப்பு வடமேல் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளரின் கட்டுக் காப்பில் இருத்தல் வேண்டும்.

*பராமரிப்பு நிதியத்தின் முகாமைத்துவச் சபை.*

27. நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம், கட்டுப்பாடு ஆகியன இதனகத்துப் பின்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளவாறு வடமேல் மாகாண நீர்ப்பாசன பராமரிப்பு நிதியத்தின் முகாமைத்துவச் சபைக்கு உரியதாகும்.

*முகாமைத்துவச் சபையின் கட்டமைப்பு.*

28. இதனகத்துப் பின்னர் சபை என அழைக்கப்படும் மாகாண நீர்ப்பாசன முகாமைத்துவச் சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) நீர்ப்பாசன விடயத்துக்குப் பொறுப்பான மாகாண அமைச்சின் செயலாளர்.

(2) வடமேல் மாகாணத்தின் பிரதான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்.

(3) வடமேல் மாகாண கமத்தொழில் பணிப்பாளர்.

(4) கமநல அபிவிருத்தி ஆணையாளர் அதிபதியின் உடன்பாட்டின் மீது நியமிக்கப்படும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் குருநாகல், புத்தளம் மாவட்ட தலைவர்கள்.

(5) மாகாண நீர்ப்பாசன நிலைபேறுடைய பராமரிப்பு பிரிவின் தலைவர்.

(6) மாகாண நீர்ப்பாசன விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அரச சார்பற்ற அமைப்பொன்றின் பிரதிநிதி ஒருவர்.

(7) மாகாண நீர்ப்பாசன விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் குருநாகல், புத்தளம் மவாட்டங்களின் கமத்தொழில் வலயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருவர்.

*படி வழங்கப்பட லாமென.*

29. இந்தச் சபையின் உறுப்பினர்களுக்கு வடமேல் மாகாண சபையின் அமைச்சர்கள் சபையினால் தீர்மானிக்கப்படும் படியொன்று வழங்கப்படலாம்.

*முகாமைத்துவ சபையின் தலைவரை செயலாளரை நியமித்தல்.*

30. (1) வடமேல் மாகாண நீர்ப்பாசன விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் உத்தியோக பூர்வமாக சபையின் தலைவராவர்.

(2) மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் இந்தச் சபையின் செயலாளராவார்.

*சபை உறுப்பினர் களின் நியமனமும் உறுப்பாண்மை இல்லாதொழிதலும்.*

31. சபை உறுப்பினர்களின் நியமனமும் பதவிக்காலம்

(1) சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று (03) வருடங்களாகும் விதத்தில் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) உத்தியோகபூர்வ நிலைமையின் மீது நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த பிற உறுப்பினர் ஒருவர் பதவிக்கான பொறுப்புக்களை உரிய வகையில் வகிக்கவில்லையென அல்லது இந்தப் பதவியை வகிப்பது பாதிப்பினை ஏற்படுத்துமென அமைச்சர் கருதும் எச்சந்தர்ப்பத்திலும் குறித்த பதவியிலிருந்து நீக்குவதற்கு அமைச்சருக்கு முழுமையான அதிகாரம் உள்ளது.

(3) உத்தியோகபூர்வ அடிப்படையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவருடைய பதவி வகிக்கும் காலம் முடிவடைவதுடன் அவருடைய உறுப்பாண்மை இல்லாதொழிக்கப்படுவதோடு, பின்னுரிமையாளரானவர் மீதி காலப்பகுதிக்கு நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(4) அமைச்சருக்கு சமர்ப்பிக்கும் எழுத்துமூல கோரிக்கையின் மீது உத்தியோகபூர்வ நிலைமையின் மீது நியமிக்கப்படும் உறுப்பினர்கள் தவிர்ந்த பிற உறுப்பினர்கள் எவருக்கும் தமது உறுப்பாண்மையை இராஜினாமாச் செய்யலாம்.

(5) உறுப்பினர் ஒருவர் இராஜினாமா செய்வதனால் அல்லது விலக்கப்படுவதனால் உருவாகும் வெற்றிடமொன்றுக்கு மீள நியமிக்கப்படுபவரின் பதவிக்காலமானது முன்னைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியிருக்கும் காலத்துக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

32. சபையின் கூட்டநடப்பெண் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் 1/3 பங்காதல் வேண்டும். — கூட்ட நடப்பெண்.

33. நிதியத்தின் பெயரில் புறம்பான கணக்கொன்று அரசாங்க வங்கியொன்றில் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளரினால் நடாத்திச் செல்லப்படுதல் வேண்டும். மேலதிக நிதி சேரும் சந்தர்ப்பங்களில் அரசாங்க வங்கியொன்றில் நிலையான வைப்பொன்றில் குறித்த தொகையை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாம். — நிதியத்தின் கணக்கு.

34. இந்த நிதியம் - — நிதியத்தின் கட்டமைப்பு.

(1) நீர்ப்பாசனத்துக்காக வருடாந்தம் தயாரிக்கப்படும் நிலைபேறுடைய பராமரிப்பு மதிப்பீட்டி லிருந்தும் மாகாண சபை நிதியிலிருந்தும் வழங்கப்படும் 30 சதவீதமான தொகை மற்றும் நிர்வாகச் செலவுகள்;

(2) அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதி;

(3) வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படும் உள்நாட்டு/வெளிநாட்டு நிதியங்களின் கீழ் இயங்கும் பிற கருத்திட்டங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி;

(4) பிற தோற்றுவாயிலிருந்து கிடைக்கக்கூடிய நன்கொடை, பரிசு அல்லது வேறுவிதத்தில் கிடைக்கக் கூடிய நிதி;

(5) நடைமுறை மற்றும் நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகை ;

(6) மீள் நிர்மாண மற்றும் புனரமைப்புக்காக அரசாங்க மாகாண சபை அல்லது பிற நிறுவனங்களி னால் குறித்தொதுக்கப்படும் நிதி

ஆகியனவற்றைக் கொண்டிருக்கும்.

35. முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு பின்வரும் விடயங்கள் தொடர்பில் நிதியத்தின் நிதிகளைப் பயன்படுத்துவதற்கு நீர்ப்பாசன பணிப்பாளருக்கு இயலும். — நிதியத்தின் செலவுகளை ஏற்றல்.

(1) கிராமிய நீர்ப்பாசனம் தொடர்பில் தயாரிக்கப்படும் வருடாந்த பராமரிப்பு மதிப்பீட்டிற்கு அமைவாக பராமரிப்பின் அளவுக்கு தொழிலாளர் கொடுப்பனவுகள் மற்றும் பொருட்கள் சார்பில் கம அமைப்புகளுக்கான கொடுப்பனவுகள் ;

(2) ஏதேனும் நீர்ப்பாசன தொழிலொன்றுக்கு செலுத்தப்படும் பராமரிப்பு முகாமையாளரின் ஊதியப்படி அவருடைய விருப்பத்திற்கு அமைவாக கம அமைப்பொன்றுக்கு வழங்குதல் ;

(3) வெற்றிகரமாக பராமரிப்பு பணிகளை நடாத்திச் செல்கின்ற நீர்ப்பாசன தொழில்களுக்குத் தீர்மானிக்கப்படும் உச்ச வரம்பின் கீழ் பராமரிப்பு பணிகளுக்காகத் தேவைப்படும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தின் பங்களிப்பினை வழங்குதல் ;

(4) நிலைபேறுடைய பராமரிப்பு வேலைகளுக்கு அல்லது பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவிற்கு அத்தியாவசியமான தேவைகளுக்கு சபையினால் குறித்தொதுக்கப்படும் பணத்தொகைகளை செலுத்துதல் ;

(5) நீர்ப்பாசன முகாமைத்துவ சபையின் தலைவருக்கும் ஏனைய பிற உறுப்பினர்களுக்கும் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான படிகள் சார்பிலான செலுத்துகைகள் ;

நிதியத்தின் கணக்குப் பணிகள்.

36. (1) நிதியத்தின் சகல வருவாய் மற்றும் செலவுக் கணக்குகள் நீர்ப்பாசன பணிப்பாளரினால் பேணப்படல் வேண்டும்.

(2) அரசாங்கக் கணக்காய்வாளர் நாயத்தினால் நிதியத்தினால் நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

ஒழுங்கு விதிகளை ஆக்குதல்.

37. (1) சபையின் தத்துவங்களை, பொறுப்புக்களை, பணிகளை பிரயோகிப்பதில் புரிகையில் நடைமுறைப்படுத்துகையில் சம்பந்தப்பட்ட இடைநேர் விளைவான விடயமொன்று தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு இயலும்.

பாகம் IV

**முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களை தாபித்தலும்**
**அவற்றின் அதிகாரங்களும்**

நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்தி குழுக் களைத் தாபித்தல்.

38. நீர்ப்பாசனப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் நீர்ப்பாசனம் செய்யப்படும் பயிர்ச்செய்கைப் பிரதேசமொன்றுக்கு நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுவொன்று அல்லது அதற்குக் கூடுதலாக தாபிக்கப்படலாம்.

குழு கூட்டிணைந்த நிறுவன மொன்றென.

39. குழுக்கள் மாகாண நீர்ப்பாசன முகாமைத்துவ பணிப்பாளரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையுமுடைய குறித்தொதுக்கப்பட்ட பெயர் கொண்டு நீர்ப்பாசனத்துக்குரிய சகல பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் வழக்கு தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்கு தொடர்வதற்கும் பிற சட்டநடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிக்கவும் அதிகாரமுள்ள கூட்டிணைந்த நிறுவனமொன்றாகும்.

உறுப்பாண்மை.

40. (1) கமத்தொழிலை தமது வாழ்வாதாரமாக கொண்டுள்ள சகலரும் -

(i) இலங்கை பிரசையாயின்,
(ii) 18 வயதுக்கு குறையாதிருப்பின்,
(iii) தமது உறுப்பாண்மையை எதிர்பார்க்கும் நீர்ப்பாசன, முகாமைத்துவ, அபிவிருத்தி குழு அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பின் இந்த நியதிச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுவின் உறுப்பாண்மையை பெற்றுக்கொள்ளலாம்.

இணை உறுப்பாண்மை.

(2) இந்த நியதிச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்தி குழுவின் இணை உறுப்பாண்மையை -

(i) தமது பிரதான வாழ்வாதாரமாக கமத்தொழில் அல்லாதவிடத்தும் குழுவின் அதிகார பிரதேசத்திற்குள் கமத்தொழிற் காணியொன்றின் உரிமையாளர் அல்லது வதிவாளர் ஒருவரினால்,

(ii) கமத்தொழிலுக்கு உரிய வருமான உற்பத்திகள் அல்லது கமத்தொழில் உற்பத்திகள் அல்லது பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள இயைபுள்ள பிரதேசத்தில் வதிந்துள்ள எவரேனும் ஆள் ஒருவரினால்

பெற்றுக் கொள்ளப்படலாம்.

(3) ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ளப்படுவதற்காக மாத்திரம் நீர்ப்பாசன அபிவிருத்திக் குழுவொன்றுக்கு இணை உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வதற்கு அதிகாரம் உள்ளதோடு, இணை உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமையோ அல்லது பதவிகளை வகிப்பதற்கோ உரிமை கிடையாது.

நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்தி குழுவின் கட்டமைப்பும் பதவிக்காலமும்.

41. சகல நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களினாலும் அதன் உத்தியோகத்தர்களாக தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர், உப செயலாளர் உட்பட 6 உறுப்பினர்களுக்கு குறையாத செயற்குழுவொன்றை தெரிவு செய்யப்பட வேண்டுமென்பதோடு அவர்களுடைய பதவிக்காலம் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பன்னிரெண்டு (12) மாதங்களாகும்.

42. நீர்ப்பாசன பணிப்பாளரினால் விதித்துரைக்கப்படும் நடவடிக்கை முறைக்கு அமைவாக சகல நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களும் அதன் உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல், குழுக்கூட்டங்களை நடாத்திச் செல்லுதல், குழுக்களின் பணிகள், குழுக்களின் கணக்குகள் போன்றவற்றை பேணுதல் வேண்டும். குழுவின் நடவடிக்கை முறை.

43. நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களின் அதிகாரங்களும் பணிகளும் குழுவின் அதிகாரங்களும் பணிகளும்.

(1) கமத்தொழிற் காணிகளில் பயிர்ச்செய்கைக்கும் வயற் காணிகளில் நெற்செய்கைக்கும் வசதிகளை வழங்குதல், அதன் விரிவுபடுத்தல் நடவடிக்கைகளைச் செய்தல், திட்டங்களை வகுத்தல்,

(2) பயிர்ச்செய்கைக்கு அல்லது வேறு விதத்திலான பயிர்ச்செய்கைகளுக்கு உரியதான மரபு வழி முறைகளை நடைமுறைப்படுத்தலும் தூண்டுதலும்,

(3) கமத்தொழில் நடவடிக்கைகள் உரிய காலங்களில் செய்வதற்கு பொறுப்பு வகித்தல்,

(4) நீர்ப்பாசன திட்டங்களினால் வழங்கப்படும் நீரையும் கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நீரையும் வினைத்திறனுடன் முகாமித்தல்,

(5) ஏதேனும் வயற் காணியொன்றில் பயிர்ச்செய்கைக்கு தடையாகவுள்ள பற்றைகளை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,

(6) தமது அதிகார பிரதேசத்துக்கு உரிய சகல நீர்ப்பாசனத்திற்கும் நிலைபேறுடைய பராமரிப்பு நிதியமொன்றை தாபித்தலுக்கு நீர்ப்பாசன கைத்தொழில் என்னும் பெயரில் நிலைபேறுடைய பராமரிப்பு கணக்கொன்றை நடாத்திச் செல்லுதலும்,

(7) நிலைபேறுடைய பராமரிப்பு நிதியத்தை தாபிப்பதற்காக உரிமை கொண்டாடும் காணியின் விஸ்தீரணத்திற்கு சமமாக விளைச்சலிலிருந்து நிர்ணயிக்கப்படும் தொகையொன்றை பங்களிப்புச் செய்தல்,

(8) குளத்தின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் நீர் முகாமைத்துவம் சார்பில் நடவடிக்கை எடுத்தல்,

(9) நீர்ப்பாசனங்களில் எல்லைகளை நிர்ணயிப்பதற்கு தேவையான ஒத்தாசையை வழங்குதல்,

(10) ஆக்கிரமிக்கும் நீர்த்தாவரங்களின் முகாமைத்துவம்,

(11) நன்னீர் மீன்பிடி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்,

(12) சகல நீர்ப்பாசன திட்டங்களின் கீழும் வருடாந்தம் பராமரிப்பு மதிப்பீடொன்றைத் தயாரித்து மதிப்பிடப்பட்ட தொகையிலிருந்து ஆகக் குறைந்தது 70 சதவீதமான பங்களிப்பை கமக்காரர்கள் அவர்களுடைய கணக்கொன்றில் வைப்புச் செய்துள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்,

(13) வருடாந்த மதிப்பீட்டிற்கு புறம்பாக எதிர்பாராத நிலைமைகளில் நீர்ப்பாசன தொழிலை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்,

(14) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்றைச் செய்யும் ஆட்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு உதவுதல்,

(15) நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டப் பணங்களை பற்று வைத்தல்.

44. (1) நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்திக் குழுக்கூட்டங்கள் மாதாந்தம் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டும். கூட்டமும் கூட்ட நடப்பெண்ணும்.

(2) குழுக்கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் அதன் உறுப்பினர்களின் மூன்றில் ஒன்றுக்கு (1/3) கூடுதல் வேண்டும்.

45. (1) குழு உறுப்பினர்களின் பெரும்பாண்மையானோரின் விருப்பத்தின் பேரில் நீர் முகாமையாளர், பராமரிப்பு முகாமையாளர், பயிர்ச்செய்கை முகாமையாளர் என்னும் மூவரை அல்லது நியமனங்கள்.

இந்நோக்கங்களுக்காக ஒருவரை அல்லது இருவரை தமது உறுப்பினர்களிடையே இருந்து தெரிவுசெய்து நியமித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(2) பராமரிப்பு நீர், பயிர் முகாமையாளர்கள் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து பன்னிரெண்டு (12) மாதங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு அப் பதவிகளை வகித்தல் வேண்டும்.

*பதவியை முடிவுறுத்தல்.*

46. (1) நீர்ப்பாசன அபிவிருத்திக் குழுவுக்கு அனுப்பப்படும் இராஜினாமாக் கடிதத்தின் மூலம் முகாமையாளருக்கு தனது பதவியிலிருந்து விலகலாம்.

(2)(i) குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் விருப்பத்துக்கமைய அல்லது வினைத்திறமையின்மை அல்லது திருப்பதியற்ற நிலைமையின் மீது பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் செய்யப்பட்ட விசாரணையொன்றிலிருந்து வெளிக்கொணரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்ட பணிப்பாளரினால் இந்த முகாமையாளரினால் இந்த முகாமையாளரை விலக்கலாம்.

(ii) மேல் 46(2) இன் கீழ் செய்யப்படும் பதவி விலக்கல் சம்பந்தமாக அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(iii) மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இறுதித் தீர்மானம் செயலாளரினால் வழங்கப்படுத்தல் வேண்டும்.

*பராமரிப்பு முகாமையாளரின் பணிகள்.*

47. (1) பராமரிப்பு முகாமையாளர் குழுவின் ஏனைய உத்தியோகத்தர்களின் உதவியுடன் வயற்காணிகளின் பெயர்ப்பட்டியலொன்றைத் தயாரித்துக் கொள்ளுதலும் குழுவினால் சான்றுப்படுத்தப்பட்ட பெயர்ப் பட்டியலை நீர்ப்பாசன பணிப்பாளருக்கு சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்தலும்;

(2) இந்தப் பெயர்ப்பட்டியலில் ஒவ்வொரு காணி உரிமையாளருக்கு அல்லது இருப்பாட்சி கொள்வோர்களுக்கு உரிமையாயுள்ள வயற் காணிகளின் விஸ்தீரணத்திற்கு அமைவாக பங்கு முறையில் அல்லது தொகுதி முறையில் அவர்களுக்கு பிரதான நீர்ப்பாசன அணை, பிரதான பிரிவுக் கால்வாய் மற்றும் குளக்கட்டு ஆகியவற்றை துப்பரவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் குறித்தொதுக்குதல்;

(3) பராமரிப்பு முகாமையாளரினால் ஒவ்வொரு வயற் காணி உரிமையாளருக்கும் இருப்பாட்சி கொள்வோர்களுக்கும் கையளிக்கப்பட்ட பகுதியை ஏதேனும் நிலையான முறையொன்றில் குறியீடு செய்தல்;

(4) இவ்வாறு குறியீடு செய்வது குறித்தொதுக்கப்படும் பகுதி ஒவ்வொரு போகமும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குளத்திலுள்ள முட்செடிகள் புற்றுக்கள் என்பனவற்றை அப்புறப்படுத்தி மண் கழுவி செல்லப்படுவதனால் சேதமடைந்துள்ள அணைப்பகுதியை மண் இட்டு நிரப்பி உரிய முறையில் ஒழுங்குபடுத்தல்;

(5) குளக்கட்டின் நிலைபேறுடைய பராமரிப்புக்கு உரியதாக கண்டறியப்பட்ட பிற பணிகளை நீர்ப்பாசன அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களின் பங்களிப்புடன் நிறைவேற்றுதல்;

(6) நீர்ப்பாசன தொழிலின் எல்லை வரையறைகளையும் ஒதுக்கல்களையும் பாதுகாப்பதற்கு தேவையான பணிகளை தொழிற்படுத்தல்

ஆகியன முகாமையாளரின் பணிகளாகும்.

*நீர் முகாமையாளரின் பணிகள்.*

48. (1) நீர்ப்பாசனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.

(2) நீர்ப்பாசனங்களுக்கு சேதத்தை விளைவிக்கின்றவர்களை சட்டத்தின் முன் நிறுவத்துவதற்கு நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்திக் குழுவுக்கு உதவுதல்;

(3) நீர்த்தேக்கங்களிலிருந்தும் நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்தும் வழங்கப்படும் நீரைப் பாதுகாத்தல்;

(4) பயிர்ச்செய்கைகளை திட்டமிடப்பட்ட கால அட்டவணையின் படி பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திச் செல்லுதலும் அதன் பணிகளை தொழிற்படுத்தலும்;

(5) நீர் வழங்கப்படுவதற்காக குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்துக்கமைவாக காலநிலை, வானிலை காரணிகளை பரிசீலனை செய்து நீர் தேவையை கண்டறிந்து பின்னர் நீரை வழங்குதல்;

(6) நீர் விரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

ஆகியன நீர் முகாமையாளரின் பணிகளாகும்.

49. (1) நீர்ப்பாசன தொழிலிலுள்ள ஆக்கிரமிப்பு நீர்த் தாவர வகைகளை அறிந்து கொள்ளுதல்; தாவர முகாமை யாளரின் பணிகள்.

(2) ஆக்கிரமிப்பு நீர்த்தாவரங்கள் விளைவிக்கும் சேதங்கள் பற்றி கமக்காரர்களுக்கு அறியச் செய்வித்தல்;

(3) ஆக்கிரமிப்பு நீர்த்தாவரங்களை அப்புறப்படுத்தும் பணிகளை ஒருங்கிணைத்தல்;

(4) நீர்ப்பாசன தொழிலிலிருந்து அப்புறப்படுத்தும் நீர்த்தாவரங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலும் ஒருங்கிணைப்பு செய்தலும்;

(5) நன்னீர் மீன்பிடி நிகழ்ச்சித் திட்டங்களின் போது குழுவுக்கு ஒத்தாசை நல்குதல்

ஆகியன தாவர முகாமையாளரின் பணிகளாகும்.

50. இந்த நியதிச்சட்டத்தின் 47(2) ஆம் உபபிரிவின் மூலம் குறித்தொதுக்கப்படும் பங்கினை சரியாக பேணாத காணி உரிமையாளரின் அல்லது இருப்பாட்சி கொள்வோர்களின் பங்கானது நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்திக் குழுவினால் துப்பரவாக்கப்பட்டு அதற்காக உறப்பட்ட தொகையையும் ஏனைய செலவுகளையும் செலுத்துமாறு இந்தக் குழுவினால் அவ்வாறு தவறும் ஆள் ஒருவருக்கு பதிவுத் தபாலில் அறிவிக்கப்படுதல் வேண்டும். தவறுகை சம்பந்தமான ஏற்பாடுகள்.

(1) இந்த அறிவித்தல் கிடைத்து 14 நாட்களுக்குள் இந்த தொகையை செலுத்த தவறினால் அவர் இந்தக் கொடுப்பனவை செலுத்த தவறியமை சம்பந்தமாக குற்றவாளியாகக் கருதப்படுவார்.

(2) இந்த நியதிச் சட்டத்தின் 50(1) இல் குறிப்பிட்டுள்ள தவறு புரியப்பட்டவிடத்து விசாரணையொன்றின் பின்னர் நீர்ப்பாசன முகாமைத்துவ பணிப்பாளர் திருப்தியுறுமிடத்து அதற்காக பணிப்பாளரின் சான்றிதழின் மீது குழுவினால் இந்தக் காணியுள்ள நீதிமன்ற அதிகார எல்லைக்குரிய நீதிவான் நீதிமன்றமொன்றுக்கு கோரிக்கையொன்றைச் செய்து வழக்கு விசாரணையொன்றை நடாத்தி இந்தத் தொகையை குறித்த நீதிமன்றத்தினால் விதித்துரைக்கப்பட்ட தண்டப்பணம் என்ற விதத்தில் அறவிடப்படுதல் வேண்டும். இவ்வாறு அறவிடப்படும் தொகை இயைபுள்ள நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்திக் குழுவின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(3) இந்த நியதிச் சட்டத்தின் 50(2) ஆம் உப பிரிவின் நோக்கத்துக்காக நீர்ப்பாசன பணிப்பாளர் அல்லது அவருக்காகப் பதிலாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரால் ஒப்பமிடப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரினால் செலுத்த தவறியிருக்கும் தொகையாக குறித்த சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்தி குழுவுக்கு சேர வேண்டுமென்பது நேரடியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியொன்றாதலும் வேண்டும்.

(4) இந்த நியதிச் சட்டத்தின் 50(3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் சாட்சியொன்றை சமர்ப்பிக்குமாறு கட்டளை பிறப்பிப்பதற்கு நீதிவான் நீதிமன்றுக்கு அதிகாரம் கிடையாது.

## பாகம் V

### நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ, அபிவிருத்திக் குழுக்களைத் தாபித்தலும் அவற்றின் அதிகாரங்களும்

51. இந்த நியதிச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நீர்ப்பாசனப் பாதை, அபிவிருத்திக் குழுக்களின் அதிகாரப் பிரதேசங்களின் பௌதிக அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசனப் பணிப்பாளரினால் நிர்ணயிக்கப்படும் குறித்த நீர்ப்பாசனத் திட்டம் அல்லது குளமுறைகள் சார்பில் “நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ, அபிவிருத்திக் குழு” என்றும் பெயரில் குழுவொன்று தாபிக்கப்படலாம். நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ அபிவிருத்திக் குழு.

நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ அபிவிருத்திக் குழு சட்டபூர்வமான நிறுவனமொன்றென.

52. நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ, அபிவிருத்திக் குழு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதோடு, அது இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையும் உடைய தனது பெயர் கொண்டு நீர்ப்பாசன விடயத்துக்கு உரிய சகல பணிகளையும் புரிவதற்கும் வழக்குத் தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் பிற சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிக்கவும் அதிகாரமுள்ள சட்டபூர்வமான நிறுவனமொன்றாகும்.

நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ அபிவிருத்திக் குழுவின் உறுப்பாண்மை.

53. குழுவின் அதிகாரப் பிரதேசத்திற்குள்ள நீர்ப்பாசன அல்லது வயல்வெளி மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்திக் குழுக்களின் பிரதான உத்தியோகத்தர்கள் மூவருமாகிய தலைவர், செயலாளர், கணக்காளர் ஆகியோர்கள் நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களாவர்.

நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ அபிவிருத்திக் குழு.

54. (1) நீர்ப்பாசன முறைமையை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் தலைவர், செயலாளர், பொருளாளர், என பிரதான உத்தியோகத்தர்கள் மூவர் இந்தக் குழுவுக்கு நியமித்துக் கொள்ளப்படுதல் வேண்டும். இதன் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்திக் குழுவொன்றிலிருந்தே நியமித்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) இந்த உத்தியோகத்தர்கள் மூவரும் அடங்கலாக 11 பேர்களுக்கு குறையாத செயற்குழுவொன்று நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்திக் குழுவுக்கு நியமித்துக் கொள்ளப்படுதல் வேண்டும் ;

(3) இந்தக் குழுவின் பதவிக் காலம் ஒரு வருடமாகும்.

நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ, அபிவிருத்திக் குழுவின் பணிகள்.

55. இந்தக் குழுவின் பணிகள் பின்வருமாறாகும்:-

(1) முழு நீர்ப்பாசன முறைமையின் முழுவதுமான பாதுகாப்பு பணிகளுக்கு நடவடிக்கை எடுத்தல்;

(2) புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளின் போது முறைமையின் நீர்ப்பாசனத் திட்டங்களின் முன்னுரிமையை தீர்மானித்தல்;

(3) முறைமையிலுள்ள நீர்ப்பாசன ஒதுக்கங்களைப் பாதுகாத்தல்;

(4) முறைமையிலுள்ள சகல நீர்ப்பாசன திட்டங்கள் சார்ந்த மேட்டுநிலங்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்;

(5) ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் மூலம் விதிக்கப்படும் நீர்ப்பாசன முறைமையொன்றில் இருக்க வேண்டிய காரணிகளை குறித்தொதுக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு உதவுதல்;

(6) ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்திக்காக முறைமையை கூறொன்றாக தொழிற்படுத்துதல்;

(7) நீர்த்தேக்கப் பிரதேசங்களைப் பாதுகாத்தல்;

(8) நீர்ப்பாசனத் தொழிலின் மற்றும் வயல்வெளியின் கழிவு சேதன பகுதிகளை பயன்படுத்தி சேதன பசளை உற்பத்தி செய்தல்;

(9) ஒன்றிணைக்கப்பட்ட கிருமி மற்றும் களை தடுப்பு முறைகளை அறிமுகப்படுத்தலும் ஒன்றிணைக்கப்பட்ட கமச்செய்கை முறைகளை அறிமுகப்படுத்தலும்;

(10) கம உற்பத்திகளின் விற்பனையும் கமக்காரர்களை அறிவூட்டும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்தலும்;

(11) பிற மாகாணங்கள் தொடர்புபட்ட குள முறைமைகள் சம்பந்தமாக ஒன்றிணைந்து செயலாற்றுதல்.

பாகம் VI

**பொது ஏற்பாடுகள்**

56. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் சகல நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களும் நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ, அபிவிருத்திக் குழுக்களும் அரசாங்க வங்கியொன்றில் கணக்கொன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்தல் வேண்டும். கணக்கொன்று ஆரம்பிக்கப்படலாமென.

57. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளவாறு அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படும் விதத்தில் குழுக்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். கணக்குகளின் கணக்காய்வு.

58. சகல நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களும் நீர்ப்பாசன முறைமை முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களும் அதன் பதவிக்காலம் ஆரம்பிக்கப்பட்டு பன்னிரெண்டு (12) மாதங்கள் கடந்த திகதியிலிருந்து இரண்டு (02) வாரங்கள் கடப்பதற்கு முன்னர் குழுவின் கணக்கு அறிக்கைகள் நீர்ப்பாசன முகாமைத்துவ பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட ஒருவருக்கு பணிப்பாளரினால் விதித்துரைக்கப்படும் மாதிரிக்கமைவாக கையளிக்கப்படுதல் வேண்டும். கணக்கு அறிக்கைகள் பணிப்பாளருக்குக் கையளித்தல்.

59. விதித்துரைக்கப்பட்டுள்ள அத்துடன் எதிர்காலத்தில் விதித்துரைக்கப்படவுள்ள வரையறைகளின் கீழ் சகல மட்டங்களையும் சேர்ந்த நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களும் நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுக்களும் பொதுச்சபையினால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பணிப்பாளரின் அங்கீகாரத்தின் மீது உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் அதிகாரம் உள்ளது. உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் வரையறை.

60. நிறுவனமொன்றினால், அமைப்பொன்றினால் அல்லது குழுவொன்றினால் ஏதேனும் விதத்திலான நீர்ப்பாசன தொழிலொன்றை புனரமைப்பதற்கு அபிவிருத்தி செய்வதற்கு பாதுகாப்பதற்கு கருதப்படுமாயின் கட்டளைகளின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளை பின்பற்றி நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுவின் உடன்பாட்டினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இதற்காக நீர்ப்பாசன முகாமைத்துவ பணிப்பாளரின் எழுத்துமூல அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்தல் வேண்டும். அங்கீகாரத்தினைப் பெறாது நீர்ப் பாசன தொழில்களை புனரமைப்பும் செய்ய முடியாதென.

61. நிறுவனமொன்றினால், அமைப்பொன்றினால் அல்லது குழுவொன்றினால் ஏதேனும் விதத்திலான நீர்ப்பாசன தொழிலொன்றை புனரமைப்பதற்கு அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரம் பெறப்படும்போது இந்த நோக்கங்களின் பின்னர் நிலைபேறாக நீர்ப்பாசன தொழிலைப் பேணுவதற்கு நீர்ப்பாசனப் பணிப்பாளர் திருப்தியுறும் விதத்தில் தொடர் நிகழ்ச்சித் திட்டங்களை எடுத்தல் அத்தியாவசியமாக செய்ய வேண்டுமென்பதோடு, இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் இல்லாத அபிவிருத்தி பணிகளுக்கு அங்கீகாரம் வழங்காமலிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதலும் வேண்டும். நிலைபேறுடைய நீர்ப்பாசன நிகழ்ச்சித்திட்டங்கள் அத்தியாவசியமானதென.

62. நிறுவனமொன்றினால், அமைப்பொன்றினால் அல்லது குழுவொன்றினால் ஏதேனும் விதத்திலான நீர்ப்பாசன தொழிலொன்றை புனரமைப்பதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரம் பெறப்படும் போது இந்த பணிகளின் பின்னர் நிலைபேறாக நீர்ப்பாசன தொழிலைப் பேணுவதற்காக இதற்குரிய நீர்ப்பாசன முகாமைத்துவக் குழுவின் உடன்பாட்டையும் பங்களிப்பையும் வழங்குவதற்கு இந்த அமைப்பின் உறுப்பினர்கள் நிராகரிப்பாளர்களாயின் இந்த நீர்ப்பாசன தொழிலை புனரமைப்பதற்கு அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படாதிருத்தல் வேண்டும். நிலைபேறாகப் பேணுவதற்கு உடன்படாமையினால் புனரமைப்பதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரம் கிடைக்க மாட்டாதென.

63. (1) இந்த நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் சம்பந்தமாக அமைச்சரினால் கட்டளைகள் ஆக்கப்படலாம். கட்டளைகள் ஆக்கும் அதிகாரம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதோடு, அவ்வாறு பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து அல்லது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அதற்குப் பின்னைய திகதியொன்றிலிருந்து இந்தக் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். அமைச்சரினால் ஆக்கப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத கட்டளைகள் யாவும் இதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இது அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிய வேண்டுமென்பதோடு, இது தொடர்பிலான அறிவித்தலொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும்.

பாகம் VII

**தவறுகள்**

தவறுகள்.

64. (1) எவரேனும் ஆள் ஒருவர், நீர்ப்பாசனமொன்றை, நீர்ப்பாதையொன்றை, குளமொன்றை, அணையொன்றை, குளநுழைவாயிலை, குளமேற்பரப்பை, கால்வாயை, சிற்றாறொன்றை, ஊற்றொன்றை, நீர்ஒதுக்கமொன்றை, நீர்ப்பாசன ஒதுக்கமொன்றை, ஓடையொன்றை, நீர்த்தாரையொன்றை, நீர்க்குழியொன்றை, ஆறொன்றை, நீர்ப்பாசன நிர்மாணிப்பொன்றை அல்லது கமத்தொழில் வாயிலொன்றை ஏதேனும் விதத்தில் -

(i) கட்டுப்படுத்துதல்,

(ii) இடைஞ்சல் உண்டாக்குதல்

(iii) அத்துமீறி பயன்படுத்துதல்

(iv) இடைஞ்சல் உண்டாக்குதல் அல்லது அத்துமீறி பயன்படுத்துதல்

(v) சேதப்படுத்துதல்,

(vi) சேகரித்து வைக்கப்பட்டுள்ள நீரை வேண்டுமென்றோ அல்லது வஞ்சகமாகவோ பிரயோசனமற்ற விதத்தில் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல்,

(vii) மேற்போந்த விடயங்களுக்கு ஒத்தாசை வழங்குதல்,

(viii) சம்பந்தப்பட்ட பிரதேசங்களினுள் பயிர்ச் செய்கைகளைச் செய்தல்,

(ix) தொடர்புபட்ட பிரதேசமொன்றிலிருந்து மண் அல்லது மணல் அப்புறப்பத்துதல் அல்லது அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தல்,

(x) தொடர்புபட்ட பிரதேசமொன்றுக்கு மண், மணல், கிரவெல் அல்லது அத்தகைய வேறு எவற்றையும் வெளியில் இருந்து கொண்டு வந்து போடுதல்,

(xi) கழிவுப் பொருட்களை விடுவித்தல் அல்லது அவை செல்வதற்கு இடமளித்தல் அல்லது வேறு இடமொன்றிலிருந்து கொண்டு வந்து போடுதல்,

(xii) மிருகங்கள், வாகனங்கள் அல்லது இயந்திர சாதனங்கள் மூலம் சேதங்களை விளைவித்தல் அல்லது விளைவிப்பதற்கு வழிவகுத்தல்

என்பன இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தவறுகளாகும்.

(2) கண்டறியப்பட்ட திட்டவட்டமான நீர்ப்பாசன முகாமைத்துவ முறைமைக்குள் நீர்ப்பாசன முகாமைத்துவ பணிப்பாளரினால் விதித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டாலொழிய, கமச்செய்கை நடவடிக்கைகளுக்காக பயிர்ச்செய்கை கிணறுகளைத் தோண்டுதல், கட்டுதல் அல்லது பேணுதல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தவறொன்றாகும்.

(3) நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுவினால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தொடர்பில் நடாத்தும் கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு முரணாக செயலாற்றுதல் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்றாகும்.

தண்டனை.

65. இந்த நியதிச் சட்டத்தின் கீழான தவறானது அல்லது இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைகளின் கீழான ஏதேனும் தவறொன்று சம்பந்தமான எவரேனும் ஆள் ஒருவருக்கு எதிராக நீதிவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்கமுறை வழக்கு விசாரணையொன்றில் குற்றவாளியாக்கப்பட்டவிடத்து ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டப்பணமொன்றுக்கு அல்லது 06 மாதங்களை விஞ்சாத காலமொன்றுக்கு மறியற்தண்டனை அல்லது தண்டப்பணம் மறியற்தண்டனை என்னும் இரண்டு தண்டனைகளுக்கும் ஆட்படுதல் வேண்டும்.

பாகம் VIII

**பொருள் கோடல்**

66. இந்த நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி - பொருள் கோடல்

(1) ''மாகாண சபை'' என்னும் போது வடமேல் மாகாணத்தின் மாகாண சபை எனவும்;

(2) ''விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர்'' என்னும் போது வடமேல் மாகாண சபையின் நீர்ப்பாசனம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் எனவும்;

(3) ''செயலாளர்'' என்னும் போது வடமேல் மாகாண சபையின் நீர்ப்பாசனம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் எனவும்;

(4) ''மாகாண நீர்ப்பாசன திணைக்களம்'' என்னும் போது இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தில் நீர்ப்பாசன விடயத்துக்குப் பொறுப்பான திணைக்களம் எனவும்;

(5) ''பணிப்பாளர்'' என்னும் போது மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் எனவும்;

(6) ''வயற் காணி'' என்னும் போது, நெல் செய்கை பண்ணப்படும் அல்லது நெற்செய்கைக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது இதற்கு முன்னர் நெற்செய்கை பண்ணப்பட்ட தொடர்ந்தும் நெற்செய்கைக்குப் பொருத்தமான காணியொன்று எனவும், (கமக்காரர் ஒருவரினால் இந்தக் காணிக்கு அருகாமையில் அல்லது சேர்ந்துள்ள சூடுமிதிக்கும் இடமாக கொட்டிலொன்றை நிர்மாணித்துக் கொள்வதற்காக அல்லது உபயோகப்படுத்தும் காணியும் இதில் உள்ளடங்கும்);

(7) ''கமத்தொழில் பாதை'' என்னும் போது கமத்தொழில் விளைச்சல்களை கொண்டு செல்வதற்கு அறுவடையை கொண்டு செல்வதற்கு அல்லது கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக மிருகங்களைக் கொண்டு செல்வதற்கு அல்லது கமத்தொழில் உபகரணங்களையும் இயந்திரசாதனங்களையும் கொண்டு செல்வதற்கு அல்லது கமத்தொழில் சேவைகளை வழங்குவதற்கு அல்லது பிற ஏதேனும் கமத்தொழில் நடவடிக்கையொன்றுக்கு உபயோகப்படுத்தும் பாதை எனவும் (கமத்தொழில் காணியொன்றுக்கு உள் நுழைவதற்காக உபயோகப்படுத்தப்படும் பாதையும் இந்நியதிச் சட்டம் அமுல்படுத்த ஆரம்பிக்கப்படும் திகதியன்றுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட எந்த விடயத்துக்கும் உபயோகப்படுத்தப்பட்ட பாதையும் இதில் உள்ளடங்கும்);

(8) ''இருப்பாட்சி கொள்வோர்'' என்னும் போது காணியின் உரிமையாளர் அல்லது குத்தகைக்காரர் அல்லது அடகுவைத்ததன் காரணமாக குத்தகைக்கெடுத்து பயிர்ச்செய்கை பண்ணும் அல்லது கமத்தொழில் காணிகளில் பயிர்ச்செய்கை பண்ணும் ஆட்கள் எனவும் (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் பராதீனப்படுத்தப்பட்ட கமத்தொழில் காணியை பயன்படுத்தும் அத்துடன் பயன்பெறுபவரும் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குத்தகைக் கமக்காரரும்கூட இதில் உள்வாங்கப்படல் வேண்டும்);

(9) ''நீர்ப்பாசனம்'' என்னும் போது அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் மூலம் பொருள் கோடப்பட்டுள்ள மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனமொன்றல்லாத நீர்ப்பாசனம் எனவும்;

(10) ''குள முறைமை'' என்னும் போது ஏதேனும் திட்டவட்டமான பள்ளங்களுடன் கூடிய பிரதேசமொன்றிலிருந்து ஆரம்பித்து ஓடும் நீர் தோற்றுவாய்களில் நீர் சேர்ந்து இறுதியில் கங்கையொன்றுடன் ஆறொன்றுடன் இணைவதற்கு முன்னர் இந்த நீர் சேரும் குளத்துடன் அமைந்துள்ள சகல நீர்ப்பாசன நீரேந்து பிரதேசங்களும் கால்வாய் ஒதுக்கங்களும் வயற்காணிகளும் உள்ளடங்கிய பிரதேசம் எனவும்;

(11) ''பராமரிப்பு முகாமையாளர் /நீர் முகாமையாளர்/தாவர முகாமையாளர்'' என்னும் போது மேலே பொருள் கோடப்பட்டுள்ள நீர்ப்பாசன திட்டங்களுக்காக வயற்காணிகளின் உரிமையைக் கொண்டுள்ள கமக்காரர்கள் அல்லது இருப்பாட்சி கொள்வோர் சார்பில் அவர்களுடைய கமத்தொழில் நடவடிக்கைகளை மிகவும் பயனுள்ளதாக்குவதற்கு முறையான

வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்காக நீர்ப்பாசன முகாமைத்துவ வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்காக நீர்ப்பாசன முகாமைத்துவ, அபிவிருத்தி குழுவினால் நியமித்துக் கொள்ளப்படும் காணி உரித்துடைய கமக்காரர்கள் அல்லது இருப்பாட்சி கொள்வோர் எனவும்;

(12) "பகுதி" என்னும் போது 47 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட வயற்காணி பெயர்ப்பட்டியலில் விஸ்தீரணத்துக்கமைய விகிதாசாரத்தின் அடிப்படையில் உரித்தாகும் பகுதி என பொருள்படும்;

(13) "சூடுமிதிக்கும் இடம்" என்னும் போது மனிதவலு அல்லது மிருகங்களைக் கொண்டு அல்லது இயந்திர சாதனங்களின மூலம் சூடுமிதிப்பதற்கு அல்லது காற்றினால் நெல் வேறுபடுத்துவதற்கு அல்லது அறுவடையை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது நெற்பயிர்களைச் சேர்த்து வைப்பதற்கு ஒதுக்கப்பட்ட அல்லது பாவிக்கப்படும் காணி எனவும்;

(14) "கமச்செய்கை கிணறு" என்னும் போது 15 அடி விட்டத்துக்கு குறைவாகாத அல்லது நில மட்டத்திலிருந்து 20 அடி ஆழத்துக்கு குறையாத நிரந்தரமாக கட்டப்பட்ட பயிர்ச்செய்கைக்காக அன்றாடம் தேவைப்படும் நீர் தேவையை நிறைவு செய்வதற்கு இயலுமான கிணறு எனவும்;

(15) "நிருமாணிப்புகள்" என்னும் போது ஏதேனும் நீர்ப்பாசனம் ஒன்றை மேம்படுத்துவதற்கு, விரிவாக்குவதற்கு, ஏதேனும் கைவிடப்பட்ட நீர்ப்பாசனமொன்றை பழுதுபார்ப்பதற்கு, மீளமைப்பதற்கு, ஏதேனும் நீர்ப்பாசனமொன்றில் அல்லது அதன் கீழ் நீர் வழங்கப்படும் பிரதேசமொன்றின் இந்த நோக்கத்துக்காக அல்லது பிரதேசத்தின் ஏதேனும் பகுதியொன்றின் பாதுகாப்புக்காக எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கையொன்று எனவும் ;

(16) "குடில்" என்னும் பொது பயிர்ச்செய்கைகளின் போது பயன்படுத்தவதற்காக பயிர்ச்செய்கை பண்ணப்படும் காணியில் நிருமாணிக்கப்படும் நிரந்தர கூரையொன்றல்லாத தூண்களின் மீது நிர்மாணிக்கப்படும் வெளிச்சுவர் எழுப்பப்படாத தற்காலிக நிருமாணிப்பு எனவும்;

(17) "கமத்தொழில்" என்னும் போது மக்களின் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு வர்த்தக ரீதியிலான நோக்கத்துடனான அல்லது அத்தகைய நோக்கமின்றியோ சகல பிரயோசனமான தாவரங்களை பயிரிடல், பாதுகாத்தல் எனவும் ;

(18) "வனம்" என்னும் போது கமத்தொழிலுக்காக பயிர்ச் செய்கை பண்ணப்படும் கமத்தொழில் காணிக்கு சேதமேற்படும் வகையில் உள்ள வனப் பகுதி எனவும் ;

(19) "நிலைபேறுடைய பராமரிப்பு" என்னும் போது சிறப்பாகவும் முறையாகவும் தொடர்ச்சியான அபிவிருத்தியைப் பேணுதல் எனவும்

பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

67. இந்த நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*04-406*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.